# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.2/2023

## CNR.No.TNCB19000

| **Deposition** | : | **DW.2** |
|---|---|---|
| Name | : | கண்ணம்மாள் |
| Father's / Husband's Name | : | லேட். பொன்னுசாமி |
| Village / முகவரி | : | சிறுமுகை, வெங்கிட்டாபுரம் |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Age / வயது | : | |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 9th July 2025

**முதல் விசாரணை**

நான் சிறுமுகை வெங்கிட்டாபுரத்தில் வசிக்கிறேன். நான் இந்த வழக்கின் 2-ம் பிரதிவாதியாவேன். வாதியை தெரியும்.. முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணம் தாக்கல் செய்கிறேன்.

1. எனது ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா, ஆ. 2 ஆகும்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நஞ்சுக்குட்டியின் வாரிகள் உயிருடன் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வரலாம் என்றால் அவர்களுக்கு தான் தெரியும். அவர்களின் உடல்நலம் நன்றாக உள்ளது என்றால் சரிதான். எனக்கு 19 வயதில் திருமணம் ஆனது. குடும்பத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்யும்போது பதிவு அலுவலகத்திற்கு சென்று பத்திரத்தில்

கையெழுத்து செய்தேனா என்றால் நான் பத்திர அலுவலகத்திற்கு போகவில்லை. அன்றைய தினம் பத்திர அலுவலகத்தில் என்ன பேசிக்கொண்டார்கள் பத்திரத்தில் என்ன எழுதிகொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பாகப்பத்திரம் பதிவு செய்து வந்ததற்கு பின்னிட்டு எத்தனை வருடம் கழித்து படித்து பார்த்தேன் என்றால் நான் பார்க்கவில்லை. அந்த பாகப்பத்திரத்தில் என்ன என்ன விஸ்தீரணங்கள் என்னென்ன காலை எண்ணில் எவ்வளவு யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் நஞ்சுக்குட்டிக்கு 805, எங்களுக்கு கொடுத்த காலை எண் வேறு கிராமத்தை சேர்ந்தது அதனால் எனக்கு தெரியாது.

மற்ற இருவருக்கும் எந்த காலை எண்ணில் பூமி கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எந்த பத்திரத்தை பார்த்து நஞ்சுக்குட்டிக்கு காலை எண்.805 ஒதுக்கப்பட்டது என்ற விபரம் தெரியும் என்றால் என் மாமனார் எனது கணவருக்கு கொடுத்து படித்து பார்த்தார். எனது மாமனார் எழுதிய பாகப்பத்திரத்தில் நஞ்சுக்குட்டிக்கு காலை எண்.805 ஒதுக்கப்பட்டதை படித்து காண்பித்தார் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் காலை எண். 805 விடுபட்டிருப்பதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது மாமனார் நஞ்சுக்குட்டிக்கு 805 ம் காலையை பாகப்பத்திரத்தில் கொடுத்ததாக நான் மேலே கூறியது பொய் என்று சொன்னால் சரியல்ல.

நஞ்சுக்குட்டி சுவாதீனத்தில் இருப்பதாக எதாவது சிட்டா பட்டா அடங்கல் போன்ற ஆவணங்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன் ஆனால் எனக்கு படிக்க தெரியாது. இன்றைக்கு வழக்கு இருப்பதாக சொல்லி நஞ்சுக்குட்டியின் வாரிசுகள் சொன்னார்கள் என்றால் சரிதான். அவர்கள்தான் இன்று நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். காலை எண்.805 பொறுத்து வேறு வழக்கு நடந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு பற்றி விபரங்களை நஞ்சுக்குட்டியின் வாரிசுகள் எனக்கு சொல்லவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கை பற்றிதான் என்னிடம் சொன்னார்கள் என்றால் சரிதான். நஞ்சுக்குட்டியின் வாரிசுகள் சொன்னதன் அடிப்படையில்தான் இன்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நஞ்சுக்குட்டிக்கு கொடுத்த பூமிதான். காலை எண்.805 பாகம் ஆகவில்லை என்றும் நஞ்சுக்குட்டி அவரது சகோதரர்களின் கூட்டு

சுவாதீனத்தில்தான் இருந்து வருகிறது என்றும் வழக்கிற்காக நஞ்சுக்குட்டியின் வாரிசுகள் சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.07.09 19:49:44 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.